

ஆகஸ்ட் 3

## *முத்திப்பேறு பெற்ற மதலேன் கபிரியேல்*

## *(1774-1835)*

இவளுக்கு ஐந்து வயது நடக்கையில் தந்தை இறந்தார். தாய் இவளைக் கைவிட்டுவிட்டு வேறொருவனை மண முடித்துக் கொண்டாள். இவளை பராமரித்து வந்தவர்கள் இவளை அன்புடன் நடத்தவில்லை. இவளுக்கு அடிக்கடி நோய் வரும், என்றாலும் மகிழ்ச்சியோடு இருப்பாள். பிறரையும் மகிழ்விப்பாள். நாட்டில் புரட்சி ஏற்பட்டது. வெனிஸ் நகருக்கு ஓடிப்போனாள். உள்ளத்தில் உபத்திரவங்கள் ஏற்பட்டன. வேதனைப்படுகிறவர்களை நன்கு தேற்றுவாள். இவளுக்கு வயது 33 ஆயிற்று. தன் மகனுடைய பத்தினி ஆகும்படி தேவதாய் இவளை அழைத்தாள். எதிர்ப்பு ஏற்பட்டது. கடவுளின் உதவியால் அதை மேற்கொண்டு சில தோழிகளோடு ஓர் எளிய மடத்திற்குச் சென்றார். அங்கு புதிய சபை ஒன்றுக்கு வேர் ஊன்றினாள்.

இவள் ஆர்வம் நிறைந்தவள். தாழ்ச்சி உள்ளவள். மறைந்த வாழ்வை நேசித்தாள். இவளது சபைக் கன்னியர் தங்கள் ஊருக்குத் தேவை என்று கேட்டார்கள். சபை நிறுவும்போது கடுமையான எதிர்ப்புகள் ஏற்பட்டது. அட்ட தரித்திரத்தில் வாழ்ந்த போது கடவுள் மீது நம்பிக்கை வைத்து தன்னை மறந்து பிறருக்கு உதவி செய்தாள். நோயால் வருந்தினாலும் அதைப் பொருட்படுத்தாது அடிக்கடி உருக்கமாக செபிப்பாள். தன் கன்னியருக்கு தாய் போல இருந்தாள். நோய் வந்தது, தவக்காலத்தின் 6-ஆம் வெள்ளிக்கிழமையான வியாகுல மாதா விழாவன்று இறக்கப் போவதாக முன்னறிவித்தாள். பலவீனமாக இருந்த போதிலும் முழந்தாட்படியிட்டு மங்களவார்த்தை மன்றாட்டை செபிக்கும் போது, சிரசை ஒரு சகோதரியின் கரங்களில் சாய்த்து அமைதியாக உயிர்விட்டாள்.

<u>**சிந்தனை:**</u> மரியாள் மீது நம்பிக்கை வைப்பவர்களால் எல்லாம் இயலும்.

<u>**செபம்:**</u> மரியாயே, மாதாவே, நீரே என் நம்பிக்கை.